செ.வெ.எண்.296/2009/செமதொஅ நாள்: 14.09.2009

**விழுப்புரம், திருவாரூர், பெரம்பலூர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் அரசு மருத்துவக் கல்லூரிகள் விரைவில் தொடங்கப்படும் என மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பேச்சு**

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தம் வட்டம், சின்னகொளம்பாக்கத்தில் கற்பக விநாயகா கல்வி அறக்கட்டளையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள புதிய மருத்துவக்கல்லூரி துவக்க விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, கற்பக விநாயகா மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தினை தொடங்கி வைத்து விழாப் பேருரையாற்றினார்.

“கற்பக விநாயகா மருத்துவக் கல்லூரியினை திறந்து வைக்கும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். நான் இந்த நிகழ்ச்சி வருகை தந்ததிலிருந்து இந்த நிமிடம் வரை மாணவர்கள் தந்த வரவேற்பினை கூர்ந்து கவனித்து வருகின்றேன். நானும் பள்ளி, கல்லூரிகளில் மாணவனாக இருந்தபோது பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளேன். பல்வேறு நிகழ்ச்சிகளையும் நடத்தியிருக்கின்றோம். விருந்தினர்களை எப்படியெல்லாம் வரவேற்று இருக்கின்றோம். இதுவரை எங்கும் காணாத ஒரு சிறப்பாக மாணவர்கள் புதிய உணர்வோடு வரவேற்று உள்ளார்கள். இங்குள்ள மாணவர்களின் கட்டுப்பாட்டினை வேறு எந்த கல்லூரியிலும் நான் பார்த்ததில்லை. நான் ஐஸ் வைக்கவில்லை. எதார்த்த நிலையைத் தான் கூறுகின்றேன்.

அரசு நிகழ்ச்சிகளாக இருந்தாலும் அல்லது பொது நிகழ்ச்சியாக இருந்தாலும் நான் அதிகம் பேசுவதை தவிர்த்து வருகிறேன். பேச்சைக் குறைத்து செயலில் திறமை காட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் தான் பணியாற்றி வருகின்றேன். இது பேறிஞர் அண்ணா பிறந்த மாவட்டம். பேறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். காஞ்சிபுரம் மாவட்டத்தில் நம் அனைவருக்கும் எல்லா உரிமைகளும் இருக்கிறது.

கற்பக விநாயகா கல்வி அறக்கட்டளையின் மூலம் தொடங்கப்பட்டுள்ள மருத்துவக் கல்லூரிக்கு தேவையான கட்டடங்கள் அனைத்து வசதிகளுடன் கூடிய ஆய்வகங்கள் என எல்லா சிறப்புகளையும் பெற்றிருக்கிறது. திறமை மிக்க சிறந்த பேராசிரியர்கள் பணிபுரிகிறார்கள். ஆகவே, இங்கு பயிலும் மாணவர்கள் விரைவில் தங்களது இலக்கை அடைவார்கள் என்பது மிகையாகாது. இக்கல்லூரியில் 2000 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். பிறநாட்டு மாணவர்களும் பயின்று வருவது பராட்டுக்குரியது. இந்த அறக்கட்டளையின் மூலம் 1994ல் புதுக்கோட்டையில் இரண்டு பட்டப்படிப்புகளுடன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டு இன்று 35 வகையான பட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. பெங்களூரில் உள்ள தேசிய மதிப்பீட்டு குழுவின் **(NAAC)** முதல் தரத்தினை இக்கல்லூரி பெற்றுள்ளது. 35க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி மாணவர்கள் ஆராய்ச்சி மேற்கொண்டு வருகின்றனர். பொருளாதாரத்தில் ஏழ்மைநிலையில் உள்ள மாணவர்களுக்கு இலவசமாக கல்வி வழங்கப்படுகிறது. இங்கு பணிபுரியும் பணியாளர்களின் குழந்தைகளுக்கு இலவசமாக கல்வி வழங்கப்படுகிறது. விளையாட்டுத் துறையில் இக்கல்லூரியின் மாணவர்கள் சிறந்து விளங்கி மாநில, தேசிய, உலக அளவில் சாதனை புரிந்துள்ளனர். தோகாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஓட்டப்பந்தயத்தில் பதக்கம் பெற்ற செல்வி.சாந்தி இக்கல்லூரியின் மாணவி என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பல்வேறு சிறப்புகளை பெற்றுள்ள இந்நிறுவனத்தை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றபின் தமிழகத்தில் கல்விக்காக அதுவும் மருத்துவக் கல்விக்காக எப்படிபட்ட சாதனைகளை எல்லாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறார் என்பதை மக்கள் அறிவார்கள். ஏழை-எளிய மக்களின் மருத்துவ வசதிக்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் 5411 மருத்துவர்களும், 5183 செவிலியர்களும், 1262 கிராம சுகாதார செவிலியர்களும். 9000 மருத்துவம் சார்ந்த பணியாளர்களும் ஆக மொத்தம் 20,586 அரசு பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்கள் கண்டறியப்பட்டு அவற்றில் மருத்துவக் கல்லூரிகளை அரசு உருவாக்கி வருகிறது. விழுப்புரம், தருமபுரி, திருவாரூர், பெரம்பலூர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் மருத்துவ கல்லூரிகள் துவங்க ஆணையிடப்பட்டு, தருமபுரியில் 2008ஆம் ஆண்டு அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது. மற்ற நான்கு மாவட்டங்களில் விரைவில் அரசு மருத்துவ கல்லூரி தொடங்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின்கீழ், 15 அரசு மருத்துவக் கல்லூரிகளும், ஒரு பல் மருத்துவக் கல்லூரியும், 2 பிசியோதரபி கல்லூரியும், 2 செவிலியர் கல்லூரியும், 21 செவிலியர் பயிற்சி நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மருத்துவ சேவையை அரசு தான் வழங்க வேண்டும் என்ற நிலையில்லாமல் தனியாரை ஊக்குவிக்கும் வகையில் இந்திய மருத்துவக் கழகத்தின் வழிமுறைகளின்படி தனியார் மருத்துவக் கல்லூரிகளும் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் 4 சுயநிதி மருத்துவக் கல்லூரிகளும், 17 சுயநிதி பல்மருத்துவக் கல்லூரிகளும் செயல்பட்டு வருகின்றன. இன்றைய தினம் துவக்கி வைக்கப்பட்டுள்ள கற்பக விநாயகா மருத்துவக் கல்லூரி ஐந்தாவது சுயநிதி மருத்துவக் கல்லூரி ஆகும். இதுதவிர சுயாட்சி மருத்துவக் கல்லூரிகளும் செயல்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் தமிழகத்தில் மருத்துவக் கல்வி வளர உறுதுணையாய் இருக்கின்றன.

கடந்த கால ஆட்சியில் அதாவது 2005-2006ஆம் நிதியாண்டில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.1487 கோடி ஆகும். 2006ல் முதல்வர் கலைஞர் பொறுப்பேற்றப்பின் 2006-2007ல் அதே துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.3391 கோடியாகும். ஏழை எளிய மக்களுக்கு மருத்துவ வசதி அளிக்கும் இந்த துறையை மேம்படுத்திட அரசு பல்வேறு திட்டங்களையும், பணிகளையும் செயல்படுத்தி வருகிறது. மருத்துவக் கல்வி பயில்கின்ற எதிர்கால தலைவர்களாகிய நீங்கள் ஒவ்வொரு துறையிலும் சிறந்த நிபுணர்களாக விளங்க எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்” என கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர் ராமச்சந்திரன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. ஆகியோர் சிறப்புரையாற்றினர். முன்னாள் மத்திய இணை அமைச்சரும், கற்பக விநாயகா கல்வி அறக்கட்டளையின் நிறுவனருமான திரு.எஸ்.ரகுபதி அவர்கள் தலைமையுரையாற்றினார். முன்னதாக விழாவிற்கு வருகைதந்த அனைவரையும் கற்பக விநாயகா கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர் டாக்டர் கவிதா சுப்பிரமணியம் வரவேற்றார். முடிவில் கற்பக விநாயகா பொறியியல் மற்றும் தொழிற்நுட்பக் கல்லூரியின் இயக்குநர் திருமதி.மீனாட்சி அண்ணாமலை அவர்கள் நன்றி கூறினார். விழாவில் முன்னாள் மத்திய இணை அமைச்சர்கள் திருமதி.சுப்புலட்சுமி ஜெகதீசன், திரு.வேங்கடபதி, முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் திரு.சேடப்பட்டி முத்தையா, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.ஆர்.ராஜா, திரு.உதயம் சண்முகம், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

செய்தி வெளியிடுபவர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.